தரம் 01 தொடக்கம் தரம் 11 வரையுள்ள மாணவர்

'வெற்றிக்கு வழிகாட்டி' நிகழ்ச்சித் திட்டம்

காணாதீவு அபிவருத்தி மற்றும் திட்டமிடல் சமூகம்

அனுசரணை : எஸ்.பிரேமாவதி – (ஓய்வு நிலை ஆசிரியை)

ஆஸ்திரேலியா மற்றும் ஐக்கிய இராச்சியம்

தரம்- 11	கர்நாடக சங்கீதம்	நேரம் :03Hrs

மாணவர் பெயர்:

சரியான விடையின் கீழ் கோடிடுக

1) வாத்திய த்ரயத்தில் இரண்டாவதாக இடம்பெறும் வாத்தியம்
   i) வயலின் ii) புல்லாங்குழல்
   iii) நாதஸ்வரம் iv) வீணை

2) வில்லுப்பாட்டு நிகழ்ச்சி ஒன்றில் விற்கடம் கட்டப்பட்டுள்ள இடம்
   i) வில்லின் இடப்புறம் ii) வில்லின் வலப்புறம்
   iii) வில்லின் நடுவில் iv) வில்லின் அடியில்

3) குறிஞ்சி ஒரு
   i) நிஷாதாந்திய இராகம் ii) பஞ்சமாந்திய இராகம்
   iii) வக்ர்ஷாடவ இராகம் iv) தைவதாந்திய இராகம்

4) தகதிமி தகிட (4 + 3) என்ற நடையில் அமைந்த விலோம சாபு தாளத்தில் கிருதிகளை இயற்றியவர்
   i) முத்துத்தாண்டவர் ii) சியாமா சாஸ்திரிகள்
   iii) முத்துசுவாமி தீக்ஷிதர் iv) பச்சிமிரியம் ஆதியப்பய்யர்

5) முத்துசுவாமி தீட்சிதரின் கிருதிகளுக்கு ஒப்பான ரஸம்
   i) திராட்சை ரஸம் ii) கதலி ரஸம்
   iii) நாளிகேத ரஸம் iv) கன ரஸம்

6) ஸாரணி, மந்திரம், பஞ்சமம், அனுமந்திரம் என்னும் நான்கு வாசிப்புத் தந்திகளைக் கொண்ட வாத்தியம்
   i) வயலின் ii) தம்புரா
   iii) வீணை iv) ஸித்தார்

7) பண், பழந்தக்கராகத்திற்கு இணையான கர்நாடக இசை இராகம்
   i) பைரவி ii) ஆரபி
   iii) மோகனம் iv)மத்தியமாவதி

8) 72 மேளகர்த்தா அமைப்பில் 7வது 9வது சக்கரங்களின் பெயர்கள் முறையே
   (i) அக்னி,ரிஷி ii) ரிஷி, ப்ரஹ்ம
   iii) வஷ், ப்ரஹ்ம iv) ரிஷி,ருது

9) பாவநாச சிவனால் இயற்றப்பட்ட கீர்த்தனைகளில் ஒன்று
   i) ஸ்ரீ ராஜராஜஜேஸ்வரி ii) இனி நமக்கொரு
   iii) உள்ளமிரங்கி iv) மாயன்குழல் இசையில்

10) ஷரப நந்தன தாளத்தில் பல்லவி பாடிய வாக்கேயக்காரர்
   i) தியாகராஜசுவாமிகள் ii) முத்துசுவாமி தீட்சிதர்
   iii) சியாமாசாஸ்திரி iv) புரந்தரதாஸர்

www.kdou.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

zoom
வகுப்புக்கள்

Grade 1 - A/L

Medium

TAMIL / ENGLISH

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala

Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி

Call: 76667 4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

11) **"இனி நமக்கொரு கவலையுமில்லை"** என்னும் கீர்த்தனை அமைந்துள்ள இராகத்தின் தாய்ராகம்
i) கரகரப்பிரியா ii) மாயாமாளவகௌளை
iii) கரிகாம்போதி iv) சங்கராபரணம்

12) **"சங்கீர்ண"** என்ற விருதைப்பெற்ற மன்னன்
i) மகேந்திரவர்மன் ii) நின்றசீர்நெடுமாறன்
iii) இராஜராஜசோழன் iv) வரகுணபாண்டியன்

13) ஐந்து அங்கங்களை கொண்ட உருப்படி
i) கீர்த்தனை ii) இராகமாலிகை
iii) வர்ணம் iv) ஸ்வரஜதி

14) தேவார பாடல்களை பண் முறையில் பாடிப் பரவச் செய்தவர்கள்
i) ஆழ்வார்கள் ii) ஓதுவார்கள்
iii) வாக்கேயக்காரர் iv) வைஸ்திகர்

15) தியாகராஜசுவாமிகள் ஸ்ரீ இராம பட்டாபிஷேக காட்சியைக் கண்ட பின்னர் பாடிய அடாணா இராக கீர்த்தனை
i) நன்னுபாலிம்ப ii) தெரதீயகராதா
iii) ஈவஸுதா நீவண்டி iv)பாலகனகமய

16) கண்ட ஜாதி மட்டிய தாளத்தின் மொத்த அட்சர எண்ணிக்கையைக் கொண்ட பிறிதொரு தாளம்
i) திஸ்ரமட்டியம் ii) மிஸ்ரதிரிபுடை
iii) சதுஸ்ர அட iv)சதுஸ்ரஜம்பை

17) **ஸா ; ; நீ த ப த நீ, த ப மா ; ;** என்னும் ஸ்வர ஸஞ்சாரம் எடுத்துக் கொள்ளும் மொத்த அட்சரங்களின் எண்ணிக்கை
(i) 16 ii) 18
iii) 20 iv) 22

18) பின்வரும் கூற்றுக்களில் வயலின் வாத்தியத்திற்கான சரியான கூற்றுக்கள்
A. இது ஓர் ஸ்திர வாத்தியம்
B. நான்கு ஸ்தாயிகள் வரைவாசிக்க கூடிய வாத்தியம்
C. மிகத்துரித காலங்களில் வாசிக்க இயலாத வாத்தியம்
D. வில் போட்டு வாசிக்கப்படும் வாத்தியம்
E. டி. என். கிருஷ்ணன் இவ்வாத்தியத்தை வாசித்து பிரபல்லியம் அடைந்தார்

(i) ABC ii) ACD
iii) BCD iv) BDE

19) பதம் என்ற உருப்படியை பாடும் போது வெளிப்படும் ரஸம்
i) கருணை ii) வீரம்
iii) சிருங்காரம் iv) சாந்தம்

20) பின்வருவனவற்றுள் சபாகான உருப்படியை மட்டும் உள்ளடக்கிய தொகுதி
i) கீதம், வர்ணம் ii) வர்ணம். ஜதீஸ்வரம்
iii) இலட்சணகீதம் , பதம் iv) கீர்த்தனை, தில்லானா

21) திருப்பால்லாண்டினை அருளியவர்
i) சம்பந்தர் ii) மாணிக்கவாசகர்
iii) சேந்தனார் iv) அருணகிரிநாதர்

22) பின்வரும் வாத்தியங்களில் மங்கள இசையை உண்டாக்கும் வாத்தியம்
i) சுருதிபெட்டி ii) தம்புரா

www.kdpu.lk

iii) புல்லாங்குழல் iv) நாதஸ்வரம்

23) சாமகானம் பாடப்படும் இராகம்
i) கரகரப்பிரியா ii) கரிகாம்போதி
iii) ஆரபி iv) தோடி

24) 72 மேள இராகமாலிகையை இயற்றியவர்
i) மகாவைத்தியநாதய்யர் ii) முத்துசுவாமி தீட்சிதர்
iii) சுப்பராம தீட்சிதர் iv) அருணாசல கவிராயர்

25) பக்தி இலக்கியங்களின் ஊடாக பக்தி இசையில் மறுமலர்ச்சி ஏற்பட்ட காலப்பபுதி
i) 5ம், 6ம் நூற்றாண்டு ii) 7ம், 8ம் நூற்றாண்டு
iii) 14ம்,15ம் நூற்றாண்டு iv) 17ம், 18ம் நூற்றாண்டு

26) ஸ்வரமேள கலாநிதி என்ற சமஸ்கிருத கிரந்தத்தை இயற்றியவர்
(i) இராமாமாத்யர் ii) கோவிந்தாச்சாரியார்
iii) வெங்கடமகி iv) கோபாலகிருஸ்ண பாரதியார்

27) ஹரஸ்வ ஸ்வரம் என்பது எதனைக் குறிக்கும்
i) வர்ஜஸ்வரம் ii) வர்க்க ஸ்வரம்
iii) நெடில்ஸ்வரம் iv) குறில்ஸ்வரம்

28) கர்நாடக இசையில் பயன்படுத்தப்படும் பிரதான தாளவாத்தியம்
i) கடம் ii) தவில் iii) உடுக்கை iv) மிருதங்கம்

29) "கங்கணம் கட்டுதல்" என்னும் மங்கல நிகழ்விற்கு வாசிக்கப்படும் வாத்தியம்
i) புல்லாங்குழல் ii) தவில் iii) வீணை iv) நாதஸ்வரம்

30) புல்லாங்குழல் வாய் வைத்த ஊதும் துளையின் பெயர்
i) அணைசு ii) சீவாளி iii) முகரந்திரம் iv) தாரரந்திரம்

31) **"அபகாரநிந்தை"** என்னும் திருப்புகழ் பாடப்படும் தாளம்
i) ஆதி ii) சதுஸ்ரரூபகம் iii) திஸ்ரதிரிபுடை iv) கண்டஜம்பை

32) சங்கராபரண இராகத்தின் நிஷாதத்தினை கைசிகி நிஷாதமாக மாற்றினால் தோன்றும் இராகம்
i) கரிகாம்போதி ii) தோடி iii) நடபைரவி iv) கல்யாணி


33) தோஷமுள்ள இராகம் எனப்படுவது
i) நட்டராகம் ii) தக்கராகம் iii) விவாதி இராகம் iv)பழந்தக்கராகம்

34) தோஷநிவர்த்திக்குரிய இராகம்
i) மத்தியமாவதி ii) மோகனம் iii) கல்யாணி iv)தோடி

35) "சின்னஞ்சிறு கிளியே" என்னும் இராகமாலிகையில் உள்ள இராகங்களின் எண்ணிக்கை
(i) 3 ii) 4 iii) 5 iv) 6

36) தெலுங்கு, வடமொழி, தமிழ் ஆகிய மூன்று மொழிகளிலும் உருப்படிகளை இயற்றிய வாக்கேயக்காரர்
i) சியாமாசாஸ்திரிகள் ii) தியாகராஜர்
iii) புரந்தரதாஸர் iv) முத்துசுவாமி தீட்சிதர்

37) எல்லா ஸ்வரமும் கோமள ஸ்வரமாய் அமைந்த இராகம்
i) கல்யாணி ii) மோகனம் iii) சங்கராபரணம் iv) தோடி

38)  இவ் இசைக் குறியீடு குறிப்பது
i) கமகம் ii) ஏற்றஜாரு iii) அனாகதம் iv) அன்னியஸ்வரம்

39) பண்டைய காலத்தில் "இராக கதம்பம்" என அழைக்கப்படும் உருப்படி
i) கீதம் ii) கீர்த்தனை iii) தில்லானா iv) இராகமாலிகை

www.kdu.lk

40) ரூபக தாள அங்க அடையாளத்தின் முன் ஒரு லகுவை சேர்த்தால் வரும் தாளம்

i) ஜம்பை தாளம் ii) மட்டியதாளம் iii) ஏக தாளம் iv) திரிபுடை தாளம்

(40x1=40 புள்ளிகள்)

பகுதி II

முதலாம் வினாவிற்கும் வேறு நான்கு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக

(01)

1. கண்ட லகுவின் குறியீட்டைத் தருக?
2. அக்னி – ஹே என அழைக்கப்படும் இராகம் எது?
3. ஹிந்துஸ்தானி இசையில் பிரதான தாள வாத்தியம் எது?
4. பஜனை பத்ததியின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
5. **"சங்கீத பிதாமகன்"** என போற்றப்படுபவர் யார்?
6. மிருதங்கத்தின் இடந்தலைக்கு வழங்கப்படும் பெயர் யாது?
7. இந்திய சங்கீதத்தின் இரு பிரிவுகளும் எவை?
8. முருகா என்ற ஆதிதாள வர்ணம் அமைந்த இராகத்தின் தாய்ராகத்தின் மேள எண் என்ன?
9. "காபி" என அழைக்கப்படும் ஹிந்துஸ்தானி இராகத்திற்கு ஒப்பான கர்நாடக இசை இராகம் எது?
10. தாளத்தில் ஜாதி பேதமடையும் அங்கம் எது?
11. **"எந்நேரமும் உன் சந்நிதியிலே நான் ...."** என்று பாடியவர் யார்?

(1+1+1+1+1+1+2+1+1+1+1 = 12 புள்ளிகள்)

(02) பின்வரும் இராகங்களுள் விரும்பிய ஓர் இராகத்திற்கு இலட்சணம் விரிவாக எழுதுக?
(உருப்படிகள், சஞ்சாரங்கள் என்பன எழுதுதல் வேண்டும்)

1. கல்யாணி 2. கரிகாம்போதி 3. ஆரபி

(12புள்ளிகள்)

(03) பின்வருவனவற்றுள் இரண்டிற்கு விரிவான விளக்கம் தருக

1. வர்ணம் 2. சாபுதாளம் 3. இராகமாலிகை

(2x6= 12புள்ளிகள்)

(04)

1. நாதஸ்வர வாத்தியத்தின் படத்தை வரைந்து பாகங்களை குறிக்குக?
2. இவ்வாத்தியத்தின் சிறப்புக்கள் இரண்டினைத் தருக?
3. இவ்வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக?
4. இவ்வாத்தியம் வாசிப்பதில் தேர்ச்சி பெற்ற இருவர் பெயரைத் தருக?

(4+4+2+2 = 12 புள்ளிகள்)

(05) முத்துசுவாமி தீட்சிதரின் வாழ்க்கை வரலாற்றினையும், இசைப்பணிகளையும் பின்வரும் விடயங்களின் கீழ் எழுதுக

1. வாழ்க்கைக்காலம்
2. பிறந்த இடம்
3. இளமைக்காலம்
4. இவர் இயற்றிய உருப்படிகள் இரண்டு
5. இவரது சிஷ்யர்கள் இருவர் பெயர்கள் தருக

(1+1+2+4+4 =12 புள்ளிகள்)

(06) இந்தியாவின் கர்நாடக இசை வரலாற்றில் 14ம் 15ம் நூற்றாண்டின் கலாசாரப் பின்னணி பற்றி விளக்குக **(12புள்ளிகள்)**

(07)

1. 35 தாளம் உருவாகும் முறையை விளக்குக
2. ஏதாவது இரண்டு தாளத்திற்குரிய பேதத்தை அட்டவணைப்படுத்துக

(4+4+4 =12 புள்ளிகள்)

www.ikeou.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2020

பாடம் :- கர்நாடக சங்கீதம்

தரம் : - 11 விடைகள்

பகுதி I

1) – 2	11) - 4	21) - 3	31) - 4
2) – 1	12) - 1	22) - 4	32) - 1
3) – 4	13) - 3	23) - 1	33) - 3
4) – 2	14) - 2	24) - 1	34) - 1
5) – 3	15) - 4	25) - 2	35) - 3
6) – 3	16) - 3	26) - 1	36) - 1
7) – 2	17) - 2	27) - 4	37) - 4
8) – 2	18) - 4	28) - 4	38) - 1
9) – 3	19) - 3	29) - 2	39) - 4
10) – 3	20) - 4	30) - 3	40) - 2

(40x1=40 புள்ளிகள்)

பகுதி II

(01)

1. l_5
2. மாயாமாளவகௌளை
3. தபேலா
4. தாளம்பாக்கம் சின்னையா
5. புரந்தரதாஸர்
6. தொப்பி
7. கர்நாடக சங்கீதம், ஹிந்துஸ்தானி சங்கீதம்
8. 22
9. கரகரப்பிரியா
10. லகு
11. கோபாலகிஷ்ண பாரதியார்

(1+1+1+1+1+1+2+1+1+1+1 = 12 புள்ளிகள்)

(02)

1. கல்யாணி

கல்யாணி 65 ஆவது மேளகர்த்தா இராகமாகும். ருத்ர சக்கரத்தில் ஐந்தாவது இராகமாகும். (ருத்ரமா) கடபயாதி சங்க்யைக்காக மேசகல்யாணி என அழைக்கப்படுகிறது. இதன் ஆரோகண அவரோகணம்

ஆ - ஸ ரி க ம ப த நி ஸ்

அ - ஸ் நி த ப ம க ரிஸ

இந்த ராகம் எடுத்துக்கொள்ளும் ஸ்வரஸ்தானங்கள் முறையே

ஸட்ஜம், சதுஸ்ருதிரிஸபம், அந்தரகாந்தாரம், பிரதிமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், காகலி நிஷாதம் என்பனவாகும். இது பிரதிமத்திம இராகங்களில் பிரசித்த பெற்ற இராகமாகும். அநேக ஜன்னியஇராகங்களைக் கொண்ட ஓர் ஜனகராகமாகும்.

சம்பூர்ண இராகம் ஜண்டைஸ்வரப்பிரயோகங்களும், தாட்டு ஸ்வரப்பிரயோகங்களும் இந்த இராகத்திற்கு இராகஞ்சகமானவை. சர்வஸ்வர கமக வரிக ரக்தி இராகம் எல்லா ஸ்வரங்களும் இராகச்சாயா ஸ்வரங்கள் விஸ்தாரமான ஆலாபனைக்கு இடம் கொடுக்கும் இராகம்

www.lkedu.lk

எப்பொழுதும் பாட உகந்த இராகம் எனினும் மாலை வேளையில் பாட மிக ரஞ்சகமாக இருக்கும் சுலோகம், பத்யம், விருத்தம் பாட ஏற்ற இராகம் இது ஓர் மூர்ச்சனாகார மேள இராகம் இதன் ரிஷப, காந்தார, பஞ்சம, தைவத, நிஷாத ஸ்வரங்களை கிரகபேதம் செய்வதால் முறையே கரிகாம்போதி, நடபைரவி, சங்கராபரணம், கரகரப்பிரியா, தோடி இராகங்கள் உண்டாகும்.

முதன் முதலில் மனித பார்வைக்கு வந்த பிரதி மத்திம இராகம் கல்யாணி இராகமாகும். சங்கராபரணத்தின் நேர்பிரதி மத்திமராகமாகும்.

சஞ்சாரம்

ஸ்நிதபமகரி - கமபதநிஸ்ா - தநிஸ்ாநிதபம

கமபத மபதநி - ஸ்ாநிதநிஸ்ா - நிக்ரிஸ்நிதஸ்ா

ஸ்ரிக்ம் பர்ம்க்ரி க்ரிஸ்நிதபம பமகரிஸா

உருப்படிகள்

கீதம்	-	பதந்தருவாய்	- ஆதி	
வர்ணம்	-	வனஜாஷிரோ	- ஆதி	
வனஜாழி	-	அடதாளம்	- பல்லவி கோபாவய்யர்	
கிருதி	-	நிதிசாலா	- சாபு	- தியாகராஜசுவாமிகள்
		ஏதவுனரா	- ஆதி	- தியாகராஜசுவாமிகள்
		வாசுதேவயனி	- ஆதி	- தியாகராஜசுவாமிகள்

2. ஹரிகாம்போஜி

இது 28வது மேளகர்த்தா இராகம் 5வது (பாண) சக்கரத்தில் 4வது ராகம் (பாண-பூ) இதன்

ஆ - ஸரிகமபதநிஸ்

அ - ஸ்நிதபமகரிஸ

இவ் ராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்களாவன ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்த மத்யமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், கைஷிகி நிஷாதம்

சம்பூர்ண இராகம், ஸ்வர, ஸ்வர கமக வரிக ரக்தி இராகம் க,ம. நி இராகச்சாயா ஸ்வரங்களும், நியாச ஸ்வரங்களும் அம்சஸ்வரங்களும் ஆகும். ரி, ம, நி கம்பித ஸ்வரங்கள், த்ரிஸ்தாயி இராகம் உருப்படிகள் ப, நி ஸ்வரங்களில் ஆரம்பிக்கப்படுகின்றன. பிரக்தியாகதகமகம் இராகத்தின் களையை நன்கு விளக்கிக் காட்டும். எப்பொழுதும் பாடலாம். பல ஜன்ய ராகங்களைக் கொண்ட ஜனக ராகங்களில் இதுவும் ஒன்று.

மூர்ச்சனாகார மேள இராகம் ஹரிகாம்போஜியில் ரி, ம, ப, த, நி ஸ்வரங்களைக் கிரகபேதம் செய்ய முறையே நடபைரவி , சங்கராபரணம், கரகரப்பிரியா, தோடி, கல்யாணி மேளங்கள் ஒலிக்கும்.

திருத்தாண்டகம் பாட உகந்த இராகம் பண்டைத்தமிழிசையில் சுத்தமேளம் எனப்படுவது ஹரிகாம்போஜி இராகமே இது செம்பாலைப்பண் என்று அழைக்கப்பட்டது. குறிஞ்சிப்பண்ணும் இவ்ராகத்தை குறிக்கும் ஹிந்துஸ்தானி இசையில் இவ்விராகத்தை ‘‘கமாஜ்தாட்’’ என்பர். அநேக ஜன்ய இராகங்களை உடைய ஜனகராகம் பிரக்தியாகதகமகம் இந்த இராகத்திற்கு அழகைக் கொடுக்கும்.

சஞ்சாரம்:

ஸரிகமபதநிஸ்ா நிதபமா – கமபதநிஸ்ா - ஸ்நிதபமக – ரிகமகரிஸா - ஸரிகமபா – பதநிஸ்ரிகமகரிஸ்ா ஸ்ரிஸநிதபமா –பமகரிஸா - ஸநிதபதநிஸா

உருப்படிகள்

கீதம் - வாசரவணனே - ஆதி - பொன்னையாபிள்ளை

க்ருதி - ராமநன்னு - ரூபகம் - தியாகராஜசுவாமிகள்

க்ருதி - ஒகமாட - ரூபகம் - தியாகராஜசுவாமிகள்

க்ருதி - பாமாலைக்கிணை - ஆதி - பாசநாசம் சிவன்

3. ஆரபி

இது 29 ஆவது மேளமான சங்கராபரணத்தின் ஜன்யம்
ஆ - ஸரிமபதஸ்
அ - ஸ்நிதபமகரிஸ

இந்த இராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்களாவன ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், காகலி நிஷாதம்

வர்ஜ ராகம் , ஆரோகணத்தில் மட்டும் காந்தாரம் நிஷாதம்வர்ஜம் ,ஔடவ சம்பூர்ண இராகம் , உபாங்க ராகம், கனராகம், பிரசித்த கனபஞ்சக இராகங்களில் இதுவும் ஒன்றாகும். இவ்வகையில் இந்த இராக்தின் சாயலை மத்திம காலம் அல்லது தானம்(கனம்) வாசிப்பதன் மூலம் எளிதாக விளங்கிக்கொள்ளலாம். ரிஷபம், மத்யமம், தைவதம், ராகச்சாயாஸ்வரங்கள் , ரிஷபம், பஞ்சமம், நியாயஸ்வரங்கள், ரிஷபம், தைவதம் கம்பித ஸ்வரங்கள், நிஷாதம், காந்தாரம் இவ்விராகத்தின் அல்ப ஸ்வரங்கள் நிஷாதம் இல்லாமலே சில உருப்படிகள் உள்ளன. அத்துடன் ஸ்ஸ்ததபபமபபமகரிரி போன்ற நிஷாத வர்ஜ பிரயோகங்களும் ரஞ்சகமானவை காந்தாரம் ஓர் துர்பல ஸ்வரம் அதனை அழுத்தமாகவோ , தீர்க்கமாகவோ, ஜண்டையாகவோ பிடிப்பது பொருந்தாது

மா, கரிஸரீ என்பது ஓர் விசேட ரஞ்சக பிரயோகம் உருப்டிகள் ரி, ப, த ஸ்வரங்களில் ஆரம்பிக்கும் எப்பொழுதும் பாடலாம். கமக வரிக ரக்தி ராகம் மிகவும் மங்கலகரமான இராகம் திரிஸ்தாயி இராகம் கச்சேரியின் ஆரம்பத்தில் பாட தகுதியான இராகம் இது ஓர் மூர்ச்சனாகார ஜன்ய இராகம் இதன் ரி, ம, ப ஸ்வரங்களை ஹிரக பேதம் செய்ய முறையே ஆபேரி, மோகன கல்யாணி, கேதாரகௌளை இராகங்கள் வரும். ரௌத்திர ரஸம் பொருந்திய இராகம் பண் பழந்தக்கஇராகம் என்று குறிப்பிடப்படுவது ஆரபியையே ஆகும்.

சஞ்சாரம்

ரிமபதாப - மபதபமகரீ - ஸரிமாகரி - ஸரிமகரிமபா
ஸ்நிதா - ததஸ்ரிஸ்ரீரீ - மாகரீ - ஸரிஸநிதா – ததரீரீ – ததஸ்ாஸ
பபதாத - மபதஸ்ா - ஸநி ததபபமபபமகரிரி – ஸரிநிதா – ததரிரிஸநீதஸா *ll*

உருப்படிகள்

கீதம் - வாரணமுகா - திரிபுடை - டைகர் வரதாச்சாரியார்

வர்ணம் - அன்னமே - ஆதி - டைகர் வரதாச்சாரியார்

க்ருதி - ஸ்ரீசரஸ்வதி - ரூபகம் - முத்துசுவாமிதீட்சிதர்

(03)

1. வர்ணம்

அப்பியாசகான உருப்படி வகைகளும் வர்ணம் மிக முக்கியமானதாகும் வரண்ங்களை அப்பியாசம் செய்வதன் மூலம் உருப்படிகளை அழகு படுத்தி, மெருகூடனும், கமகத்துடனும் , பாடவும் , வாசிக்கவும் முடியும் வர்ணத்தில் வார்த்தைகள் குறைவாகவே காணப்படும் இதன் சாகித்தியமானது பக்தி விஷயமாகவோ சிருங்கார விஷயமாகவோ, சங்கீத வித்துவான்களை ஆதரித்த பிரபுக்கள் பற்றியதாகவோ இருக்கும்

வர்ணமானது பல்லவி, அனுபல்லவி, முக்தாயிஸ்வரம், சரணம், சரணஸ்வரங்கள் எனும் அங்கங்களைக் கொண்டது இவற்றுள் பல்லவி , அனுபல்லவி, முக்தாயிஸ்வரம் எனும் அங்கங்களை பூர்வாகத்துள்ளும், சரணம்,சரணஸ்வரம் எனும் அங்கங்கள் உத்தராங்கத்தினுள்ளும் அடங்கும் சரணத்தை உபபல்லவி என்றும் எத்துக்கடை பல்லவி என்னும், சிட்டை பல்லவி என்றும் அழைப்பதுண்டு சரண ஸ்வரங்களுக்கு எத்துக்கடை ஸ்வரங்கள் என்றும் சிட்டை ஸ்வரங்கள் என்றும் வேறுபெயர்கள் உண்டு .

வர்ணம் இரண்டு வகைப்படும் 1. தானவர்ணம், 2. பதவர்ணம்

தானஜாதி சஞ்சாரங்களுடன் பிரகாசிக்கும் உருப்படியே தானவர்ணமாகும். இவ்வர்ணத்தில் பல்லவி, அனுப்பல்லவி, சரணம், ஆகிய பகுதிகளுக்கு மாத்திரம் சாகித்தியம் காணப்படும். தான வர்ணங்களை கச்சேரிகளின் ஆரம்பத்தில் பாடினால், கச்சேரி விரைவில் களைகட்டும். இதனை இரண்டு காலங்களிலும் பாடவும் வாசிக்கவும் முடியும். தானவர்ணங்கள் ஆதி தாளம், அடதாளம் கண்டஜாதி, திரிபுடை தாளம், சதுஸ்ரஜாதிஅடதாளம், ஜம்பை தாளம் போன்ற தாளங்களில் இயற்றப்பட்டுள்ளன.

பத வர்ணமானது நாட்டியத்திற்காக இயற்றப்பட்ட உருப்படி வகையாகும். இரு சௌக்க காலத்திலே அமைக்கப்பட்டது. அபூர்வமாக சில பத வர்ணங்கள் மத்திமகாலத்திலும் அமைந்துள்ளன.

பத வரண்த்தில் எல்லா அங்கங்களிற்கும் சாகித்தியம் காணப்படும். இதன் தாது ஆடுவதற்கு ஏற்றதாகவும் , மாது அபிநேயத்திற்கு ஏற்றதாகவும் அமைந்திருக்கும். பத வர்ணங்களை சௌக்க வர்ணம் என்றும் ஆட வர்ணம் என்றும் அழைப்பதுண்டு. ஜதிகள் உள்ள பத வர்ணங்களும் உள்ளன. அவை பதஜதி என்று அழைக்ப்படுகின்றன.

தானவர்ணங்களை இயற்றிய சில மகான்கள் பச்சிமிரியம் ஆதியப்பய்யர், சியாமாசாஸ்திரிகள், பல்ல்வி கோபாலய்யர், ஸ்வாதிதிருநாள்மகாராஜா, வீணை குப்பய்யர், டைகர் வரதாச்சாரியார், இராமநாதபுரம்ஸ்ரீனிவாஸஐயங்கர்

பத வர்ணங்களை இயற்றிய மகான்கள் இராமஸ்வாமிதீஷீதர், முத்துசுவாமிதீஷிதர், தஞ்சாவூர்வடிவேல்நட்டுவனார், இராமசிவன்

2. சாபு தாளம்

நாடோடி கானத்தினின்றும் வந்த புராதன தாளங்களில் இதுவும் ஒன்று. சாபுதாளத்தை சாய்ப்பு தாளம் எனவும் அழைப்பதுண்டு. இத்தாளத்தை இரண்டு தட்டுகளாகப் போடுவது வழக்கம் வீச்சும் தட்டுமாகக்கூட இந்தத் தாளத்தைப் போவதுண்டு. பொதுவாக சாபு தாளம் என்பது மிஸ்ரசாபு தாளத்தினையே குறிக்கும்.

சாபுதாளம் நான்கு வகைப்படும்.
1. திஸ்ரசாபு
2. கண்டசாபு
3. மிஸ்ரசாபு
4. ஸங்கீர்ணசாபு

திஸ்ரசாபு : இது ஆவர்த்தனத்திற்கு (1 + 2 = 3) மூன்று எண்ணிக்கைகளைக்கொண்டது. முதல் தட்டுக்கு ஒரு எண்ணிக்கையும், இரண்டாம் தட்டுக்கு இரண்டு எண்ணிக்கைகளும் கொண்டது. சிலநாடோடிப்பாடல்களை இத்தாளத்தில் காணலாம். திஸ்ரசாபு தாளத்திற்குரிய ஜதி தகிட என்பதாகும்.

உதாரணம் : "சின்னஞ்சிறுகிளியே..." (இராகமாலிகை)

கண்டசாபு : இது ஆவர்த்தனத்திற்குரிய (2 ஸ்ரீ 3 ஸ்ரீ 5) ஐந்து எண்ணிக்கைகளை கொண்டது முதல் தட்டுக்கு இரண்டு எண்ணிக்கைகளும் , இரண்டாம் தட்டுக்கு மூன்று எண்ணிக்கைகளும் கொண்டது. தகதகிட என்பது கண்டசாபு தாளத்தின் ஜதியாகும்.

உதாரணம் :

1. பரிதானமிச்சிதே (பிலஹரி ராகம்)
2. குருலேக எடுவண்டி (கௌரி மனோகரி ராகம்)

மிஸ்ர சாபு : இது ஆவர்த்தனத்திற்குரிய (3 + 4 = 7) ஏழு எண்ணிக்கைகளை கொண்டது முதல் தட்டுக்கு மூன்று எண்ணிக்கைகளும் , இரண்டாம் தட்டுக்கு நான்கு எண்ணிக்கைகளும் கொண்டது. தகிடதகதிமி என்பது மிஸ்ர சாபு தாளத்தின் ஜதியாகும்.

உதாரணம் :

1. நிதிசாஸகமா (கல்யாணி இராகம்)
2. நீ. சித்தமு (தன்னியாசி இராகம்)

சங்கீர்ண சாபு : இது ஆவர்த்தனத்திற்குரிய (4 + 5 = 9) ஒன்பது எண்ணிக்கைகளை கொண்டது முதல் தட்டுக்கு நான்கு எண்ணிக்கைகளும் , இரண்டாம் தட்டுக்கு ஐந்து எண்ணிக்கைகளும் கொண்டது. தகதிமி தகதகிட என்பது சங்கீர்ண சாபு தாளத்தின் ஜதியாகும். அபூர்வமான சில பல்லவிகளில் இத்தாளம் உபயோகிக்கப்படுகிறது.

3+4 என்ற எண்ணிக்கையில் வருவது மிஸ்ரசாபு (கிரமசாபு) தாளமாகும். இதன் எதிர் பதம் (விலோமசாபு) இதன் அட்சரங்கள் 4+3 என்ற எண்ணிக்கையில் வரும்.

சியாமாசாஸ்திரிகள் இவ்விலோமசாபு தாளத்தில் பல கிருதிகளை இயற்றியுள்ளார்.

(04)

1. நாதஸ்வரம் படம் வரைந்து பாகம் குறித்திருத்தல் **(4 புள்ளிகள்)**
2. **I.** கோயில்திருவிழா கல்யாணி வைபவங்களில் வாசிக்கப்படுகின்ற மங்களகரமான வாத்தியம்
   II. இதில் பாரி, திமிரி என்ற இருவகையுண்டு **(4 புள்ளிகள்)**
3. இதன் அமைப்பினை சுருக்கமாக விளக்கி இருத்தல் **(2 புள்ளிகள்)**
4. திருவாடுதுறைஇராஜரத்தினபிள்ளை
   காரக்குறிஞ்சி அருணாசலப்பிள்ளை
   திருப்பாம்பரம் நடராஜசுந்தரம்பிள்ளை
   இருவர் பெயர் இருந்தால் **(2 புள்ளிகள்)**

(05)

1. 1776-1835 (19ம் நூற்றாண்டு)
2. திருவாரூர் வைத்தீஸ்வரன் கோயில்
3. இவர் இளமையிலேயே சமஸ்கிருதம், தெலுங்கு, பாட்டு, வீணை, காவியம், நாடகம், அலங்காரம், மாந்திரீகம் ஆகியவற்றை கற்றார்.
   தன் தந்தையிடம் இசை இலக்கண சாத்திரத்தை நுண்மையாக கற்று தேர்ந்தார்.
   இச்சமயத்தில் காசியிலிருந்து வந்த சிதம்பர நாத யோகி எனும் பெரியாருடன் காசிக்கு சென்று அங்கு அவருடன் 5 வருடங்கள் தங்கி இந்துஸ்தானி சங்கீதத்தை கற்றார்.

இவற்றுள் இரு விடயங்கள் இருப்பின்

(2 புள்ளிகள்)

4. ஸ்ரீநாதாதி – மாயாமாளவ கௌளை
   ஆனந்தாம்ருதஹர்ஷினி – அமிர்தவர்ஷினி
   கஞ்சதளாயதாட்சி – கமலமனோஹரி
   அஷ்டயலிங்க – சங்கராபரணம்
   தொகுதிக் கிருதிகள்
   பஞ்சமலிங்க ஸ்தலக் கிருதிகள்
   நவக்கிரகக் கீர்த்தனைகள்
   கமலாம்பா நவாவர்ணம்
   சிவ நவாவர்ணம்
   மணிப்பிரவாளக் கீர்த்தனைகள்
   இவற்றுள் இரு விடயங்கள் இருப்பின் **(2 புள்ளிகள்)**

5. சின்னஸ்சுவாமி தீட்சிதர்
   பாலுஸ்சுவாமி தீட்சிதர்
   தஞ்சை நால்வர்களாகிய பொன்னையா, சின்னையா, சிவானந்தம் வடிவேலு
   வீணை வெங்கட்ராமையர்
   இவற்றுள் இரு விடயங்கள் இருப்பின் **(2 புள்ளிகள்)**

மொத்த புள்ளிகள் : (1+1+2+4+4 =12 புள்ளிகள்)

(06)

14ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஹரிபாரரால் (சங்கீத சுதாகரம்) எனும் நூல் எழுதப்பட்டது. ஹரிபாலரின் சங்கீத சுதாகரம் எனும் நூலிலேயே முதன் முதலில் இந்திய சங்தீதத்தின் இரு பிரிவுகளான கர்நாடக சங்கீதம், ஹிந்துஸ்தானி சங்கீதம் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.

www.ikedu.lk

14ம் நூற்றாண்டில் பாரசீகசம், அரேபியா போனற நாடுகளில் இருந்து வந்த சங்கீத முறைகள் இந்திய சங்கீதத்தில் கலந்தமையினால் வட இந்தி சங்கீத முறையானது இந்துஸ்தானி சங்கீதம் என மாற்றம்பெற்றது.

கி.பி 15ம் நூற்றாண்டில் தாளபாக்கம், சின்னையாகவும் அவரது முன்னோர்களும் தெலுங்கு மொழியில் சுமார் 200 ஆயிர்ம் கீர்த்தனைகளும், வேறு பல சம்பிரதாய கீர்த்னைகளும் இயற்றி பஜனை பத்ததிக்கு வழிவகுத்தனர்.

தாளபாக்கம் அன்னமாச்சாரியாரின் அத்தியாத்ம சங்கீதனங்களில் முதன் முதலில் பல்லவி, சரணம் எனும் அங்க வித்தியாசங்கள் காணப்பட்டன.

தாளபாக்கம் சின்னையா, புரந்தரதாஸர், ஆகியோரின் கிருதிகளில் முதன்முதலில் அனுப்பல்லவி, அங்கம் சேர்க்கப்பட்டது.

முன்னைய பிரபந்தங்களில் உத்க்ரஹம், த்ருவம், மேளபாகம், ஆபோகம் என குறிப்பிடப்ட்டிருந்த விடயங்களே பின்னர் பல்லவி, அனுப்பல்லவி, சரணம் என்ற அங்கங்களாக காணப்பட்டது.

அருணகிரிநாதர் சந்தங்களை அமைத்து தமிழ் மொழியில் ஆயிரக்கணக்கான திருப்புகழ் பாடல்களை இயற்றினார்.

திருப்புகழ்பாடல்கள், சந்தக்கனிவும் ,ஓசைச்சிறப்பும் அமையப்பெற்ற உறுதியளிக்கும் தன்மைவாய்ந்தமையாக இருந்தமையால் வாக்கிற்கு அரணகிரி என சிறப்பிகப்பட்டார்.

முப்பத்தைந்து தாளங்கள், 108 தாளங்கள், 175 தாளங்கள் ஆகிய தாளங்களைக் கொண்டு சந்தச்சிறப்புடன் பாடல்களை ஆக்கியமையினால் அருணகிரிநாதர் " சந்தப்பாவலப்பெருமான்" என போற்றப்பட்டார்.

ஒவ்வொரு திருப்புகழ் பாடலுக்கும் முன்பாக சந்தநடையும், தாளநடையும் குறிப்பிடப்பட்டமையினால் பல தாளங்கள் அழிந்த போகாமல் இன்னும் எமக்கு கிடைக்க பெற்றுள்ளன.

இவற்றுள் ஒரு விடயத்திற்குஒருபுள்ளி வீதம் 12 விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் **(12 புள்ளிகள்)**

07) 1.

ஸப்த தாளங்களான துருவம், மட்டியம், ரூபகம், ஜம்பை, திரிபுடை, அட, ஏகம் ஒவ்வொன:றும் லகுவின் 5ஜாதிகளான திஸ்ரம், சதுஸ்ரம், கண்டம், மிஸ்ரம், சங்கீர்ணம் ஆகியவற்றுடன் பேதமடைந்து (7x5) 35 தாளங்கள் உருவாகின்றன

2.

துருவதாளம்	அங்கம்	மொத்த எண்ணிக்கை
திஸ்ர ஜாதி துருவதாளம்	l_3 0 l_3 l_3	11
சதுஸ்ர ஜாதி துருவதாளம்	l_4 0 l_4 l_4	14
கண்ட ஜாதி துருவதாளம்	l_5 0 l_5 l_5	17
மிஸ்ர ஜாதி துருவதாளம்	L_7 0 l_7 l_7	23
சங்கீர்ண ஜாதி துருவதாளம்	L_9 0 l_9 l_9	29

ஜம்பை தாளம்	அங்கம்	மொத்த எண்ணிக்கை
திஸ்ர ஜாதி ஜம்பை தாளம்	l_3 u 0	6
சதுஸ்ர ஜாதி ஜம்பை தாளம்	l_4 u 0	7
கண்ட ஜாதி ஜம்பை தாளம்	l_5 u 0	8
மிஸ்ர ஜாதி ஜம்பை தாளம்	L_7 u 0	10
சங்கீர்ண ஜாதி ஜம்பை தாளம்	L_9 u 0	12

(4+4+4=12 புள்ளிகள்)

www.kedu.lk